பேரூராட்சிகள் இயக்ககம்,
குறளகம், சென்னை–108.

**சுற்றறிக்கை**

ந.க.எண். 10389/2011/ஆ1 நாள் 07.07.2011

பொருள் :- மழை நீர் சேகரிப்பு திட்டம் – பேரூராட்சிகள் துறை – மழை நீர் திட்டம் பேரூராட்சிகளில் முழுமையாக செயல்படுத்திட அறிவுரை வழங்குதல் – சார்பு.

பார்வை:- 1. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 215-A
2. இவ்வியக்கக சுற்றறிக்கை ந.க.எண்.14792/10/ஆ1, நாள் 29.8.2010
3. தினமலர் நாளிதழ் செய்தி 13.06.2011
4. இவ்வியக்கக சுற்றறிக்கை ந.க.எண். 10389/2011/ஆ1, நாள் 16.6.2011

***

பேரூராட்சிகளில் மழை நீர் சேகரிப்பு திட்டத்தினை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் கட்டாயமாக்கி வகை செய்யப்பட்டுள்ளதை வலியுறுத்தி பார்வை 4ல் காணும் இவ்வியக்கக சுற்றறிக்கையில் நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தப்பட்டது. அதன் தொடர்பாக கீழ் காணும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

- பேரூராட்சிகளுக்கு சொந்தமாக அனைத்து கட்டிடங்களிலும் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள மழை நீர் சேகரிப்பு கட்டிடங்களை புனரமைப்பு செய்யப்பட வேண்டும்.
- மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்படாத அனைத்து கட்டிடங்களிலும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும்.
- பேரூராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு சாரா அலுவலகங்கள் மற்றும் பள்ளி கட்டிடங்கள் அனைத்திலும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் 100 % ஏற்படுத்தப்பட்டுள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.

- பேரூராட்சிகளில் உள்ள அனைத்து நீர் ஆதாரங்களையும் தூர் வாரி மழை நீர் / நிலத்தடி நீரை சேகரிப்பதற்கான கட்டமைப்புகளை ஏற்படுத்துதல் வேண்டும். இதற்காக பேரூராட்சி பொது நிதியில் இருந்தும், சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் Corporate Social Responsibility (CSR) என்ற திட்டத்தின் கீழ் பெரிய நிறுவனங்களை அணுகி அதன் மூலம் இப்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் 215–A பிரிவில் மழை நீர் சேகரிப்பு திட்டத்ினை செயல்படுத்துவதை கட்டாயமாக்கி வகை செய்யப்பட்டுள்ளது. இதனை பின்பற்றி பேரூராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளிலும் மற்றும் வணிக, தொழில் நிறுவன கட்டிடங்களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.
- புதிய கட்டிடங்கள் கட்டுவதற்காக கட்டிட அனுமதி கோரி வரப்பெறும் விண்ணப்பங்களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் இருப்பதை உறுதி செய்து அதன் பின்னர் உரிய கட்டிட அனுமதி வழங்கப்பட வேண்டும். முடிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கும் முன்பாக மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதை உறுதி செய்த பின்னரே சொத்து வரி விதிக்கப்பட வேண்டும்.
- பேரூராட்சி பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுவினர், வியாபாரிகள், நகர் நல சங்கத்தினர்களுடன் ஒருங்கிணைந்த மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வேண்டும்.
- பேரூராட்சி அலுவலகத்திலும், பள்ளி கட்டிடங்கள் மற்றும் இதர அரசு, தனியார் கட்டிடங்களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பின் அவசியத்தை உணர்த்தும் வகையில் விளக்கப் படங்கள் மற்றும் அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்த சுவர் விளம்பரங்கள் வரைதல் வேண்டும்.

- வணிகர் நலசங்கம், தொண்டு நிறுவனங்கள் போன்ற அமைப்புகளுடன் கலந்து பேசி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அனைத்து பேரூராட்சிகளிலும் 31.7.2011 க்குள் முடிக்கப்பட வேண்டும். பேரூராட்சிகளில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை 100 % முழு முனைப்புடன் வெகு சிறப்பாக செயல்படுத்தும் செயல் அலுவலர்கள் மற்றும் மண்டல அளவில் வெகு சிறப்பாக செயல்படுத்தும் உதவி இயக்குநருக்கு உரிய பரிசு மற்றும் பாராட்டுச் சான்று வழங்கி கௌரவிக்கப்படும். ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுரைகளைத் தொடர்ந்து இந்த கூடுதல் அறிவுரைகளையும் செயல்படுத்திட செயல் அலுவலருக்கு உரிய அறிவுரை வழங்கிட பேரூராட்சி உதவி இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் இது தொடர்பாக இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் வாராந்திர முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/—மா.சந்திரசேகரன்
இயக்குநர்.

பெறுநர்

பேரூராட்சிகள் உதவி இயக்குநர், அனைத்து மண்டலங்கள்
அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள்.